A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 85 / 2021**

திரு. சா. ஏனோக் செல்வின்,
C/o. திரு. விக்டர்,
51/766, 29 வது தெரு, சாந்தி நகர்,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002.

………மேல்முறையீட்டாளர்
(Rep by திரு. C. செல்வராஜ்)

எதிர்

1. உதவி செயற்பொறியாளர் /பாளையம்கோட்டை,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33/11KV SS, பாளையம்கோட்டை – 627 002.

2. செயற்பொறியாளர்/ நகர்/திருநெல்வேலி,
O/o. செயற்பொறியாளர்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33/11KV SS, பாளையம்கோட்டை – 627 002.

3. மேற்பார்வை பொறியாளர்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அண்ணா கட்டிடம், தியாகராயநகர் – 627 011.

...... எதிர்மனுதாரர்கள்
(திரு D. எட்வார்ட் பொன்னுசாமி, உதவி செயற்பொறியாளர் /பாளையம்கோட்டை
திரு S.முத்துகுட்டி, செயற்பொறியாளர்/ நகர்/திருநெல்வேலி
திரு N. வெங்கடேஷ்மணி, செயற்பொறியாளர்/பொது/ திருநெல்வேலி)

**மனு பெறப்பட்ட நாள்: 19-11-2021**

**கேட்புரை நாள்: 06-01-2022**

**ஆணை நாள்: 27-04-2022**

19.11.2021 அன்று பெறப்பட்ட திரு. சா. ஏனோக் செல்வின், C/o. திரு. விக்டர், 51/766, 29 வது தெரு, சாந்தி நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 85/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 06.01.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனக்கு சொந்தமான இடத்திலிருக்கும் உயர்மின் அழுத்த (33KV line) மின்பாதையை மாற்றி அமைக்கும்படியும், தனக்கு ஏற்பட்ட நட்டத்தை இழப்பீட்டுத் தொகையாக வழங்க வேண்டியும் மற்றும் இழப்பு ஏற்படுத்திய அலுவலர்கள் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள உயர்மின் அழுத்த மின்பாதையை மாற்றி அமைக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்ததாகவும் அதற்குண்டான தொகை ரூ.5,01,210/–யை செலுத்தியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 செலுத்திய தொகை போக மேலும் ரூ.2,00,000/– செலுத்த கூறியதாகவும், பணி முடிந்தவுடன் மீதி தொகையை திருப்பி தந்து விடுவோம் என எதிர்மனுதாரர் கூறிய காரணத்தினால் ரூ.2,00,000/–யும் செலுத்தியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.3 தளவாட சாதனங்கள் தேவைக்கு குறைவாக இருந்ததால் மேலும் ரூ.1,20,170/– செலுத்துமாறு இளநிலை பொறியாளர்/வி.எம்.சத்திரம் அவர்களிடமிருந்து கடிதம் கிடைக்கப்பெற்றதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.4 எனவே இது குறித்து மேல்முறையீட்டாளர் திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்தில் 17.08.2021 அன்று மனு பதிவு செய்துள்ளார்.

2.5 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் 03.11.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு</u>:

திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 03.11.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"<u>**மன்றத்தின் தீர்வு**</u>:

*எதிர்மனுதாரர் 30 தினங்களுக்குள் மேற்படி மின்பாதை மாற்றி அமைக்கும் பணியில் அனைத்து பணிகளையும் முடித்து, மறுமதிப்பீடு செய்து உரிய அலுவலரிடம் அனுமதி பெற்று TNERC Supply Code 6(viii) விதிக்கு உட்பட்டு செயல்படுத்திடவும் அதனை மனுதாரர் மேற்படி விதியின்படி கூடுதல் தொகை செலுத்தவோ (அல்லது) திரும்ப பெறவோ உடன்பட்டு செயல்படுத்திட மன்றம் தீர்வு செய்து முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 06.01.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு. C. செல்வராஜ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு D. எட்வார்ட் பொன்னுசாமி, உதவி செயற்பொறியாளர் /பாளையம்கோட்டை, திரு S.முத்துகுட்டி, செயற்பொறியாளர்/நகர்/திருநெல்வேலி மற்றும் திரு N. வெங்கடேஷ்மணி, செயற்பொறியாளர்/பொது/திருநெல்வேலி

மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 08.07.2019 அன்று தனக்கு சொந்தமான இடத்திலிருக்கும் உயர்மின் அழுத்த (33KV line) மின்பாதையை மாற்றி அமைக்கும்படி சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் மனு கொடுத்ததாகவும், பணமும் செலுத்தியதாகவும், ஆனால் இன்றுவரை வேலை முடியவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 உயர் அழுத்த மின்பாதையை மாற்றியமைக்க 8.7.2019இல் மனுக் கொடுத்து அது பரிசீலிக்கப்பட்டு 2020 ஆண்டு பிப்ரவரி மாதம் மதிப்பீட்டின்படி ரூ.5,01,210/- செலுத்த வேண்டும் என கூறியதற்கிணங்க அப்பணத்தை செலுத்த அலுவலகம் சென்றிருந்தபோது மேலும் ரூ.2,00,000/- செலவாகும் என்று அலுவலர்கள் தெரிவித்ததாகவும், அதற்கு தான் இசையவில்லை எனவும் அதனால் அடுத்த வாரம் தகவல் வரும் என்று அனுப்பிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 பின் ஏப்ரல் 2020-இல் ரூ.7.25 லட்சம் செலுத்த வேண்டும் என்று வாய்மொழியாக தெரிவித்ததாகவும், மதிப்பீட்டு நகலை தனக்கு தந்தால் அது குறித்து பரிசீலிக்கிறேன் எனக் கூறியதற்கு மதிப்பீட்டின் நகல் ஆகஸ்ட் 2020-இல் வழங்கியதாகவும், அத்துடன் இத்தொகை அதிகமாயிருந்தால் பணி முடிந்த பின் மீதியை திருப்பி தந்து விடுவோம் என்று சொன்ன காரணத்தால் 21.08.2020 அன்று அவர்கள் துண்டு சீட்டில் எழுதிக்கொடுத்த தொகையான ரூ.7,75,510 ஐ D.D. மூலமாக செலுத்தியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 பின்னர் இளநிலை பொறியாளர் வி.எம். சத்திரம் வேலை செய்வதற்கான தளவாட சாதனங்கள் தேவைக்கு குறைவாக இருந்ததால் கூடுதல் தளவாட சாதனங்களுக்கு மதிப்பீடு தயார் செய்து ரூ.1,20,170/- க்கு கடிதம் கிடைத்த 15 நாட்களில் கட்டும்படி 21.12.2020 நாளிட்ட கடிதம் கிடைக்கப்பெற்றதாகவும், இது குறித்து அலுவலகம் சென்று கேட்ட போது நீங்கள் ஏற்கனவே எதிர்மனுதாரருக்கு கூடுதல் தொகை வந்தாலும் செலுத்த சம்மதிக்கிறேன் என்று பத்திரத்தாளில் எழுதிக்கொடுத்துள்ளீர்கள் அதன் அடிப்படையில் கேட்கிறோம் என எதிர்மனுதாரர் கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 08.07.2019 அன்று பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது 9 மாதங்களாக நடவடிக்கை ஏதுமில்லை எனவும், 60 தினங்களுக்குள் பணி முடிக்க வேண்டும் என்பது புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், மதிப்பீட்டு விலைபட்டியல் (Cost data) 01.04.2020 லிருந்து மாற்றமடையும் என்பது தெரிந்த நிலையில் 31.03.2020 அன்று மதிப்பீடு மேற்பார்வை பொறியாளரின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 15 தினங்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மதிப்பீட்டுத் தொகை சுமார் 5 மாதங்களுக்கு பின்னர் வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பதாரரால் பணம் செலுத்தப்பட்டு அதன்படி பணிகள் முடிக்கப்பட்ட பின்னர்தான் மதிப்பீட்டு விலை பட்டியல் அடிப்படையில் அல்லாமல் பயன்படுத்தப்பட்ட தளவாட சாமான்களின் வாங்கிய விலையின் அடிப்படையில்தான் கணக்குகள் முடிக்கப்பட வேண்டும் என்ற விதிமுறை புறக்கனிக்கப்பட்டுள்ளதாகவும், ஒரே வேலைக்கு மூன்று மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், 31.03.2020 அன்று அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ளபடியான மின் பாதையில் அதிகப்படியான தளவாடச் சாமான்கள் தேவைப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதிலிருந்து மேற்படி அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தவறாக தயாரிக்கப்பட்டு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 புதிய இரும்பு மின் கம்பங்களுக்கு பதிலாக பழைய மின் கம்பங்களை ஒட்ட வைத்து (welding) பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், எனவே மதிப்பீட்டுத் தொகை மிகவும் குறைந்துவிடும் எனவும், co-optex காலனி சாலை வழியாக இருக்கும் மின் பாதையினை அதற்கு அடுத்த தெருவான வெல்கம் காலனி 30 அடி ரோட்டில்

அமைக்காமல் வேண்டுமென்றே சுற்றுப்பாதையில் புதிய மின் பாதை அமைக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது அமைக்கப்பட்டிருக்கும் பாதை வழியாக முறையான மதிப்பீடு தயார் செய்யப்பட்டால் சுமார் 6 லட்சம் ரூபாய்தான் மதிப்பீட்டுத் தொகை வர வாய்ப்பிருக்கிறதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 "பணி முடிக்கப்பட்டு கணக்கு முடிக்கும் போது தளவாடச் சாமான்களின் விலை ஏற்றத்தின் காரணமாக ... " என்று தன்னிடம் Under taking வாங்கிய நிலையில் பணி முடிக்கப்படாமலும், கணக்கு முடிக்கப்படாமலும் உள்ள நிலையில் அதிகப்படியாக ரூ.1,20,170/- செலுத்துமாறு கேட்ட செயல் விதிகளை புறக்கணிக்கும் தன்மையை வெளிக்காட்டுவதாகவும், வகுக்கப்பட்ட விதிமுறைகளை புறக்கணித்து நுகர்வோர் குறைதீர்மன்ற தலைவர் 50 நாட்களுக்குள் விசாரணை நடத்தி, உத்திரவு வழங்கவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

<u>விதி மீறல்கள்</u>

1. ஸ்டேன்டாட் ஆப் பெர்மான்ஸ் பிரிவு-7
2. சப்ளை கோடு பிரிவு-6
3. டிஸ்ரிபியூசன் கோடு பிரிவு -37(2)
4. 60 நாட்களுக்குள் முடிக்கப்படாமையால் இந்த தர குறைபாட்டின் தீவிரத்தை கருத்தில் கொண்டு மின் சட்டப்பிரிவு 57ன் படி சிறப்பு இழப்பீட்டுத் தொகை வழங்குதல்.

எனவே மேலே விவரிக்கப்பட்டுள்ள நிலையினை கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு அதன் அடிப்படையில் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் தன்னால் எழுப்பப்பட்ட கீழ்க்கண்ட தீர்வுகளை வழங்கி உத்தரவிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

5.9 08.07.2019 நாளிட்ட தனது விண்ணப்பத்தில் கேட்டுக் கொண்டிருந்தபடி தனது மனையின் குறுக்காகச் செல்லும் மின்பாதையினை மேலும் கால தாமதமின்றி உடனடியாக மாற்றித்தரும்படி மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மாற்றியமைக்கப்படும் மின்பாதையை கோ-ஆப்டெக்ஸ் சாலைக்கு அடுத்த தெருவாகிய வெல்கம் காலனி சாலை வழியாக அமைத்து, பணியினை முடித்து தனக்கு தேவையற்ற அதிகப்படியான செலவீனம் ஏற்படுத்துவதை தவிர்க்குமாறும், குறைவான தூரத்தில் மின்பாதையை மாற்றியமைக்க வாய்ப்பிருக்கும் நிலையில் தனக்கு அதிகப்படியான செலவினை ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டமிட்ட

உள்நோக்கத்துடன் செயல்பட்டு தனக்கு பெறுமளவு இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளமைக்கு நியாயம் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 விண்ணப்பம் பெறப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் மின்பாதையை மாற்றியமைக்கும் பணி விதிமுறைகளுக்கு புறம்பாக செய்தபடியால் தனக்கு ஏற்பட்டிருக்கும் நட்டம் சுமார் ரூ 7 லட்சத்தை இழப்பீட்டுத் தொகையாக வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 மின்பாதை மாற்றியமைக்கும் பணிக்கு யார் பொறுப்பு என்று தெளிவாகத் தெரியாத நிலையில் எனது 27.07.2021 நாளிட்ட கடிதத்திற்கு உரிய பதில் அளிக்காமலிருந்த மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளரின் குறிப்பிட்ட 10 தினங்களில் பதிலளிக்காத செலுக்காக உரிய இழப்பீட்டுத் தொகை வழங்குமாறும், வெல்கம் காலனி சாலை வழியாக குறுகிய தூரத்தில் மின்பாதையை மாற்றியமைக்க வாய்ப்பு இருக்காது என்ற நிலை ஏற்படுமானால் தற்போது அமைக்கப்பட்டுள்ள அதிகப்படியான தூரத்தில் மின்பாதை அமைப்பதற்கு நிர்வாக ரீதியாக ஏற்பட்ட முறைகேடுகளுக்கு தனக்கு தண்டனை வழங்க முயற்சிக்காமல் குறைந்த தூரத்தில் மின்பாதை மாற்றியமைத்தால் எவ்வளவு கட்டணம் வருமோ அக்கட்டணத்தை மட்டும் கணக்கீடு செய்து தன்னிடம் வசூல் செய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன் ஏற்கனவே வசூல் செய்யப்பட்ட அதிகப்படியான கட்டணத்தை உரிய அபராத வட்டியுடன் திருப்பித் தரும்படி மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மேலே பட்டியலிடப்பட்டுள்ள குறைகளை மற்றும் முறைகேடுகளுக்கு உரிய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நுகர்வோருக்கு இழப்பு ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் வாரியத்தின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையிலும் செயல்பட்ட அலுவலர்கள் மீது துறை சார்ந்த நடவடிக்கை தொடர்வதுடன் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இழப்புகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து ஈடு செய்யுமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திரு. S. ஏனோக் செல்வின், C/O திரு.விக்டர் என்ற மேல்முறையீட்டு மனுதாரருக்கு சொந்தமான காலிமனை பாளையங்கோட்டை தாலுகா, கோ.ஆப்.டெக்ஸ் காலனி, கே.டி.சி நகரில் உள்ளதாகவும், அதன் குறுக்காக செல்கின்ற 33 கே.வி. மின்

பாதையினை மாற்றி அமைப்பது சம்மந்தமாக திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம் நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு மன்றத்தால் தகுந்த தீர்வுகாணப்பட்டு, மனுதாரருக்கு மன்றத்தின் தீர்வு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலும் விசாரணையின் போது Consumer Grievance Redressal Forum and Electricity Ombudsman விதிமுறையான 7(9) –வது பிரிவில் குறிப்பிட்டவாறு மன்ற முடிவுகள் பதிவு செய்யப்பட்டு உரிமம்தாரருக்கு மற்றும் புகார்தாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுவில் குறிப்பிட்டவாறு 08.07.2019–இல் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் உரிய அலுவலரின் மதிப்பீட்டு அனுமதி பெற்று மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கியதற்கு மனுதாரர் இரண்டு தவணையாக பணம் செலுத்தியதால் 01.03.2021 அன்று தான் முழு மதிப்பீட்டு தொகையினையும் செலுத்தியுள்ளார். அதன் பின்னர் பணி மேற்கொள்ளப்பட்டதில் கொரோனா பெரும் தொற்றின் காரணமாக மின் தடை தவிர்க்கப்பட்டதால் பணியினை குறித்த காலத்திற்குள் முடிக்கப்படவில்லையென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரர் மாற்றி அமைக்ககோரிய மின்பாதை அடர்த்தியான வீடுகள் சூழ்ந்த பகுதி வழியாக செல்வதால் அதனை மாற்றி அமைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் மற்றும் தொழில்நுட்ப காரணங்களால் மதிப்பீடானது பலகட்ட தெளிவுரைக்கு பின்னர் உரிய அலுவலரால் அனுமதிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனுதாரருக்கு மதிப்பீட்டு கட்டணம் செலுத்த 01.04.2020–இல் அறிவிப்பு வழங்கியதற்கு மனுதாரர் காலதாமதமாக மதிப்பீட்டுத் தொகையிலும் குறைவு தொகையை வரைவோலையாக எடுத்து வந்து செலுத்த பிரிவு அலுவலகத்தை அனுகியதால் மனுதாரரின் கோரிக்கையை நிறைவு செய்யும் நல்லெண்ணத்தின் பொருட்டு மேற்படி வரைவோலை வரவு வைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 கூடுதலாக பயன்படுத்தப்பட்ட தளவாட சாமன்களுக்கு உரிய தொகையினை வாரியத்திற்கு வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேல்முறையீட்டாளரிடமிருந்து பெறப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு கூடுதல் மதிப்பீடு

ரூபாய் 1,20,170/-ற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கான தொகையினையும் செலுத்து மாறு மேல்முறையீட்டாளரிடமும் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டவுடன் தான் Actual மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு மின் வழங்கல் விதி 6 (Viii) - யின் படி தவறுதலாக தயார் செய்யப்பட்ட மறுமதிப்பீட்டு தொகையான ரூபாய் 1,20,170/- யினை ரத்து செய்யப்பட்டடு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், மேலும் 01.03.2021 அன்று தான் மீதத் தொகை 2,000/- மனுதாரரால் செலுத்தப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேல்முறையீட்டாளர் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையான ரூபாய் 7,77,510/-ற்கு பதிலாக 7,75,510/- ரூபாய் செலுத்தியிருந்த போதிலும் நுகர்வோரின் நலன் கருதி பணி மேற்கொள்வதற்காக பணி ஆணை பெறப்பட்டது. ஆனால் மேல்முறையீட்டாளர் மதிப்பீட்டு தொகை முழுமையாக 01.03.2021 அன்று செலுத்திய பின்புதான் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேல்முறையீட்டாளரின் 27.07.2021 நாளிட்ட கடிதம் செயற்பொறியாளரால்/ விநியோகம்/நகர்புறம்/திருநெல்வேலி அலுவலகத்தில் 29.07.2021 அன்று பெறப்பட்டது. அதற்கான பதிலுரை செயற்பொறியாளர் நகர்புற அலுவலகத்திலிருந்து 31.07.2021 அன்று தேதியிட்ட கடிதம் வாயிலாக அனுப்பப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 33 KV மின் பாதையை மாற்றி அமைத்த தெருவின் வழியாகவும் 11 KV மின் தொடர் மற்றும் LT மின் தொடர்கள் செல்வதால் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டும் மின் விநியோகத்தை நிறுத்தாமல் மேற்படி பணியை சாத்தியமில்லை. மேலும் கொரோனாகாலத்தில் மின் தடையை தவிர்க்க தலைமையிடம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மனுதாரர் மதிப்பீட்டு முழுத்தொகையும் 01.03.2021 செலுத்திய பின்பு உள்ள காலத்தில் கொரோனா 144 தடை உத்தரவு அமலில் இருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 செயல்திறன் செந்திரங்களுக்கான விதி 27–இல் விதிவிலக்கு என்ற தலைப்பில் கொரோனா பெருந்தொற்றால் 144 தடை உத்தரவு இருந்ததால் அனைத்து நிலையிலும் பணியாளர்கள் பணிக்கு வருவது 50 சதவீதம் குறைக்கப்பட்டதாலும், கொரோனா பெருந்தொற்றால் பணியாளர்கள் ஒன்று கூடுவதை தவிர்த்தல் மற்றும் போக்குவரத்து முடக்கம் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் விதிமுறைகள் அமலில் இருந்தது காலதாமதத்திற்கான காரணம் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 மன்றத்தின் தீர்வில் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் மின் வழங்கல் விதி 5 (6) (vii) –யின் படி அனைத்து பணிகளையும் நிறைவு செய்து திருப்பி ஒப்படைக்க வேண்டிய தளவாடசாமன்கள் பண்டக சாலையில் ஒப்படைத்து Actual Cost–க்கான மதிப்பீடு செய்து உரிய அலுவலரிடம் அனுமதி பெற்று மனுதாரருக்கு மதிப்பீட்டு நகலுடன் அறிவிப்பு வழங்கவே மேலும் 30 நாட்கள் கால அவகாசம் மன்றத்தால் வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக Actual மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உரிய அலுவலரிடம் அனுமதி பெற்று மனுதாரரால் ஏற்கனவே இது சம்மந்தமாக செலுத்தப்பட்ட ரூபாய் 7,77,510/– கழிக்கப்பட்டு மீதம் ரூபாய் 3,190/– யினை செலுத்துமாறு இளநிலை பொறியாளர் / விநியோகம் / வி.எம் சத்திரம் அவர்களால் அறிவிப்பு கடிதம் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

**7.1** மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் வாதங்களை கருத்தில் கொண்டால், கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு மின்பாதை மாற்றியமைப்பதற்கான விதிமுறைகள் குறித்து மின்வழங்கல் விதிகளில் கூறப்பட்டுள்ளது யாது ?

(ii) மேல்முறையீட்டாளருக்கு மின்வழங்கல் விதிகளின்படி நிவாரணம் ஏதும் வழங்க இயலுமா ?

**8.0 <u>வழக்கெழு 1–ற்கான தீர்வு–</u>**

**8.1** மேல்முறையீட்டாளர் அவருடைய வீட்டின் மேலே சென்ற மின்பாதையை மாற்றியமைத்து தருவதற்கு அவர் செலுத்திய தொகையில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

தவிர்த்து மீதமுள்ள தொகையை இதுநாள் வரை தமக்கு வழங்கப்படவில்லையென்று தெரிவித்துள்ளார். ஆகவே விதிப்படி அவருக்கு வழங்கப்பட வேண்டிய மீதித்தொகை வட்டியும் பெற்றுத்தருமாறு கோரியுள்ளார்.

8.2 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(6) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"5(6) மின்னிணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்–*

*(1) மின்னிணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்கவேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்கவேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றுப்பணி தொடங்கப்படும். மதிப்பீடு பின்வரும் உறுப்பினங்களை உள்ளடங்கும் :–*

*(i) முடிந்தவரை பழைய களத்தில் பிரித்தெடுக்கப்பட்ட பொருள்கள் புதியகளத்தில் உபயோகப்படுத்தல் வேண்டும்.*

*(ii) பிரிக்கப்பட்டு மறு உபயோகத்துள்ளாகும் பொருட்களின் மதிப்பில் 10 சதவீதம் பிரிக்கும் செலவுகள் மற்றும் புதிய களத்திற்கு/பண்டக சாலைக்கு பொருட்களை ஏற்றி, கொண்டு சென்று, இறங்கும் செலவுக்காக அனுமதிக்கப்படும்.*

*(iii) மாற்றல் வேலைகளுக்கான புதிய பொருட்களின் மதிப்பு*

*(iv) புதியு பொருட்களின் மதிப்பில் 5 சதவீதம் புதிய களத்திற்கு பொருட்களை ஏற்றி, கொண்டு சென்று, இறக்க அனுமதிக்கப்படும்.*

*(iv) பொருட்களின் தற்போதைய மதிப்பில் 10 சதவீத புதிய களத்தில் பொருட்களின் கட்டுமானத்திற்கு அனுமதிக்கப்படலாம்.*

*(vi) மீட்கப்பட்ட கழிவு பொருட்களின் தற்போதை மதிப்பின் 5 சதவீதம் கொண்டு செல்லும் செலவிற்காக அனுமதிக்கப்படலாம்.*

*(vii) நுகர்வோர்/விண்ணப்பதாரருக்கு மொத்த வேலை மதிப்பீட்டின் அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டு, கீழ்கண்டவாறு வரவுவைக்கப்படவேண்டும்.*

*(a) மீட்கப்பட்டு மறு உபயோகப்படும், ஆனால் புதுகளத்தில் உபயோகப்படாத பெருட்களின் மதிப்பில் 20 சதவீதத்திற்கு குறையாத புத்தகமதிப்பு/எழுத்து இறுதி மதிப்பு.*

*(b) மீட்கப்பட்ட ஆனால் மறு உபயோகப்படாத பொருட்களின் கழிவு மதிப்பு, உண்மை மதிப்பின் 10 சதவீதம் குறையாமலிருக்கும்.*

*(viii) வேலை முடிவடைந்தவுடன், பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பு ஏற்றி கொண்டு சென்று இறக்குதல், கட்டுமான செலவு ஆகியவற்றை உள்ளடக்கி, மறு மதிப்பீடு செய்து, அதன் நகல் மின் நுகர்வோருக்கு அளிக்கப்படும். முதல் மதிப்பீடு மறு மதிப்பீட்டைவிட அதிகமாக இருந்தால், மீதி தொகை விண்ணப்பதாரர்/ நுகர்வோருக்கு மூன்று மாதங்களுக்குள் அளிக்கப்படும். முதல் மதிப்பீடு மறு மதிப்பீட்டை விட குறைவாக இருந்தால், வேறுபாட்டுத்தொகை விண்ணப்பதாரர்/ நுகர்வோரிடமிருந்து வசூல் செய்யப்படுதல் வேண்டும்."*

**8.3** மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது மின்னிணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்கவேண்டும் என்றும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும் என்றும் மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்கவேண்டும் என்றும் தெரிகிறது. அவ்வாறு அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றுப்பணி தொடங்கப்படும் என்றும் தெரிகிறது. அந்த மதிப்பீட்டின்படி 1 (i) முதல் (vii) வரை உறுப்பினங்களை உள்ளடங்கிய பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிகிறது.

**8.4** மேலும் மதிப்பீட்டின்படி வேலை முடிவடைந்தவுடன் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பு ஏற்றிக்கொண்டு சென்று இறக்குதல், கட்டுமான செலவு ஆகியவற்றை உள்ளடக்கி, மறு மதிப்பீடு செய்து அதன் நகல் மின் நுகர்வோருக்கு அளிக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் முதல் மதிப்பீடு மறு மதிப்பீட்டைவிட அதிகமாக இருந்தால் மீதி தொகை விண்ணப்பதாரர்/ நுகர்வோருக்கு மூன்று மாதங்களுக்குள் அளிக்கப்படவேண்டுமென்றும் ஆனால், முதல் மதிப்பீடு மறு மதிப்பீட்டை விட குறைவாக இருந்தால் வேறுபாட்டுத்தொகை விண்ணப்பதாரர்/நுகர்வோரிடமிருந்து வசூல் செய்யப்படுதல் வேண்டும் என்றும் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

**9.0** **<u>வழக்கெழு 2–ற்கான தீர்வு–</u>**

9.1 **இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர்**

**1) 08.07.2019 நாளிட்ட தனது விண்ணப்பத்தில் கேட்டுக் கொண்டிருந்தபடி தனது மனையின் குறுக்காகச் செல்லும் மின்பாதையினை கால தாமதமின்றி உடனடியாக மாற்றித்தரும்படியும்,**

**2) மாற்றியமைக்கப்படும் மின்பாதையை கோ–ஆப்டெக்ஸ் சாலைக்கு அடுத்த தெருவாகிய வெல்கம் காலனி சாலை வழியாக அமைத்து, பணியினை**

முடித்து தனக்கு தேவையற்ற அதிகப்படியான செலவீனம் ஏற்படுத்துவதை தவிர்க்குமாறும்,

3) விண்ணப்பம் பெறப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் மின்பாதையை மாற்றியமைக்கும் பணி விதிமுறைகளுக்கு புறம்பாக செய்தபடியால் தனக்கு ஏற்பட்டிருக்கும் நட்டம் சுமார் ரூ 7 லட்சத்தை இழப்பீட்டுத் தொகையாக வழங்குமாறும்,

4) தனது 27.07.2021 நாளிட்ட கடிதத்திற்கு உரிய பதில் அளிக்காமலிருந்த மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளரின் குறிப்பிட்ட 10 தினங்களில் பதிலளிக்காத செயலுக்காக உரிய இழப்பீட்டுத் தொகை வழங்குமாறும், மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார்.

9.2 எதிர்மனுதாரரின் 22.12.2021 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட பணிக்கான பணி ஆணை 21.12.2021 அன்று முடிவு செய்யப்பட்ட அறிக்கையின்படி (DCW work order closing statement) மனுதாரருக்கு ரூ.75,810/-யை திரும்ப வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே, மேல்முறையீட்டாளரின் முதல் கோரிக்கை நிறைவேறிவிட்டது என கருதுகிறேன்.

9.3 மேல்முறையீட்டாளரின் இரண்டாவது கோரிக்கையில், மாற்றியமைக்கப்படும் மின்பாதையை கோ-ஆப்டெக்ஸ் சாலைக்கு அடுத்த தெருவாகிய வெல்கம் காலனி சாலை வழியாக அமைத்து அதிகப்படியான செலவீனம் ஏற்படுத்துவதை தவிர்க்குமாறு கோரியுள்ளார். ஒரு நுகர்வோரிடமிருந்து DCW விண்ணப்பம் பெறப்பட்ட நிலையில் அதற்குண்டான பணி ஆணையை பெறும்போது உரிமம்தாரர் பொதுப்பாதையில் அந்தச் சூழலில் உள்ள பொதுப்பாதையின் அகலம், பொதுமக்கள் குடியிருப்பின் அடர்த்தி, பொதுமக்களின் நலன், அமைக்கப்படும் உயர்வழுத்த/தாழ்வழுத்த மின்பாதை ஆகியவற்றை கருத்தில் கொண்டு தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ரீதியாக ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்யப்படுகிறது. மேலும் அதிகாரிகளின் கள ஆய்வின்படியே மதிப்பீடு அனுமதிக்கப்படுகிறது. இந்த நிலையில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

9.4 மேல்முறையீட்டாளரின் மூன்றாவது கோரிக்கையில் விண்ணப்பம் பெறப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் மின்பாதையை மாற்றியமைக்காததால் ரூ.7

லட்சம் இழப்பீட்டுத் தொகையாக கோரியுள்ளார். எதிர்மனுதாரரோ செயல்திறன் செந்திரங்களுக்கான விதி 27–இல் விதிவிலக்கு என்ற தலைப்பில் கொரோனா பெருந்தொற்றால் பணியாளர்கள் பணிக்கு வருவது 50 சதவீதம் குறைக்கப்பட்டதாலும், போக்குவரத்து முடக்கம் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் விதிமுறைகள் அமலில் இருந்ததாலும் காலதாமதம் ஏற்பட்டது என தெரிவித்துள்ளார். கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி மேல்முறையீட்டாளர் 8.7.2019 அன்று விண்ணப்பம் பதிவு செய்துள்ளார். ஆனால் மதிப்பீட்டு கட்டணம் செலுத்துவதற்கு 01.04.2020 அன்றுதான் எதிர்மனுதாரரால் அறிவிப்பு கடிதம் காலதாமதமாக வழங்கப்பட்டுள்ளது.

9.5 மேல்முறையீட்டாளர் விண்ணப்பம் அளித்த தேதியிலிருந்து மதிப்பீட்டு கட்டணம் செலுத்த 1.4.2020 அன்று அறிவிப்பு கடிதம் வழங்கிய இடைப்பட்ட காலத்தில் கொரோனா பெருந்தொற்றோ அல்லது தேர்தல் நடைமுறை விதிகளோ இல்லை. மேலும் மேல்முறையீட்டாளர் 21.8.2020 அன்று ரூ.7,75,510/– செலுத்தியிருந்த நிலையில் எதிர்மனுதாரர் மதிப்பீட்டுத் தொகையில் குறைவுத்தொகையான ரூ 2,000/– உடனடியாக பெற்று உரிய காலத்தில் பணிநிறைவு செய்திருக்கலாம். மேலும் காலதாமதத்திற்கு எதிர்மனுதாரர் கூறும் காரணங்கள் ஏற்புடையதாக இல்லை. எனவே, தமிழ்நாடு மின்பகிர்மான செந்திரங்களுக்கான விதிகளின்படி சேவை குறைபாடு உள்ளதாகவே கருதவேண்டியுள்ளது. ஆகவே தமிழ்நாடு மின் பகிர்மானச் செயல்திறச் செந்திரங்கள் ஒழுங்குமுறை விதி 21(6)–இன்படி இழப்பீடு ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) மேல்முறையீட்டாளருக்கு வழங்கலாம் என தீர்வு செய்யப்படுகிறது.

**9.6** மேலும், மேல்முறையீட்டாளர் அவருடைய **27.07.2021** நாளிட்ட விண்ணப்பத்திற்கு பதில் தராமல் இருந்ததற்குரிய விதிப்படியான இழப்பீட்டை வழங்கவும் கோரியுள்ளதால், இந்த கோரிக்கை சம்பந்தமாக கீழே கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச் செந்திரங்கள் விதிகளுக்கான ஒழுங்குமுறைவிதிகள் 17ஐ ஆராய விரும்புகிறேன்.

***"17. Responding to Consumer's Complaint –***

*If any consumer makes a complaint in writing to the Territorial Engineer of the concerned licensee then, the Territorial Engineer concerned shall reply to the consumer within ten days after receipt of the letter. In case the Territorial Engineer requires to visit the site or consult any other officer to give a comprehensive reply,*

*the Territorial Engineer shall explain to the consumer as to why a substantive response cannot be sent immediately and intimate the name address and telephone number of the Officer dealing with the complaint. The Territorial Engineer shall also ensure that a substantive response is sent to the consumer within twenty days of receiving the complaint letter"*

**9.7** மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதித்தொகுப்பின் விதி 17ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, நுகர்வோர் எவரும் சம்பந்தப்பட்ட பகுதி பொறியாளருக்கு எழுத்து வடிவில் முறையீடு செய்தால் அந்த சம்பந்தப்பட்ட பொறியாளர் கடிதத்தை பெற்ற 10 நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும். பகுதிப் பொறியாளர் இடத்தினை பார்வையிட அல்லது பிற அலுவலரிடம் கலந்து ஆலோசனை செய்ய விரும்பும் நேர்வில் நுகர்வோருக்கு ஏன் பதில் அனுப்ப முடிய வில்லை என்பதை விளக்க வேண்டும். மற்றும் அந்த முறையீட்டை கையாளும் அலுவலரின் பெயர், முகவரி, தொலைபேசி, எண் ஆகியவற்றை தெரிவிக்கவேண்டும். பகுதிப்பொறியாளர், முறையீட்டு கடிதம் பெற்ற இருபது நாட்களுக்குள் நுகர்வோருக்கு போதிய பதிலுரை அனுப்பப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**9.8** மேல்முறையீட்டாளர் அவரின் கோரிக்கை சம்பந்தமாக 27.07.2021 அன்று மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களிடம் முறையீடு செய்துள்ளார். ஒழுங்குமுறை விதி 17—ன்படி மேல்முறையீட்டாளர் சம்பந்தப்பட்ட உதவி பொறியாளரிடம் முறையீடு செய்யவில்லை. எனவே, மேல்முறையீட்டாளர் இழப்பீடு பெற தகுதியில்லை என தீர்வு செய்யப்படுகிறது.

**10.0** **<u>முடிவுரை:</u>**

**10.1** பத்தி 9.0 உள்ள தீர்வின்படி

(i) மேல்முறையீட்டாளரின் மனையின் குறுக்காகச் செல்லும் மின்பாதை 30.10.2021 அன்றே மாற்றியமைக்கப்பட்டுள்ளது. எனவே மின்பாதையை வெல்கம் காலனி சாலை வழியாக அமைக்கக் கோரும் கோரிக்கை ஏற்புடையதல்ல.

(ii) 08.07.20219—இல் மின்பாதையை மாற்றியமைக்க சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பேரில் 30.10.2021—இல் அன்று மின்பாதை

மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதாவது விண்ணப்பம் சமர்ப்பித்து இரண்டு வருடம் கழித்து பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சேவை குறைபாட்டிற்கு தமிழ்நாடு மின்பகிர்மானச் செயல்திறச் செந்திரங்கள் விதி 21(6)–இன்படி இழப்பீடு ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு வழங்குமாறு தீர்வு செய்யப்படுகிறது. மேற்கண்ட தொகையை காசோலையாக வழங்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

(iii) மேல்முறையீட்டாளர் தன்னுடைய கோரிக்கை சம்பந்தமாக மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளரிடம் முறையீடு செய்துள்ளார். தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்திரங்கள் விதிகளுக்கான ஒழுங்குமுறை விதி 17–இன்படி மேல்முறையீட்டாளர் சம்பந்தப்பட்ட உதவி பொறியாளரிடம் (Territorial Engineer) முறையீடு செய்யவில்லை. எனவே, 10 தினங்களுக்குள் பதிலளிக்காத செயலுக்கு மேல்முறையீட்டாளர் இழப்பீடு பெற தகுதியில்லை.

10.2 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் இந்த தீர்வு கிடைக்கப்பெற்ற **45** நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

**10.3** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு **எண்.85/2021** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:
1. திரு. சா. ஏனோக் செல்வின்,
C/o. திரு. விக்டர்,
51/766, 29 வது தெரு, சாந்தி நகர்,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002.

2. உதவி செயற்பொறியாளர் /பாளையம்கோட்டை,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33/11KV SS, பாளையம்கோட்டை – 627 002.

3. செயற்பொறியாளர்/ நகர்/திருநெல்வேலி,
O/o. செயற்பொறியாளர்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33/11KV SS, பாளையம்கோட்டை – 627 002.

4. மேற்பார்வை பொறியாளர்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அண்ணா கட்டிடம், தியாகராயநகர் – 627 011.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.